# காவிரியில் 5,000 கனஅடி நீர் திறக்கப் பரிந்துரை

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, செப். 12:** தமிழகத்துக்கு காவிரியில் அடுத்த 15 நாள்களுக்கு விநாடிக்கு 5,000 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை செய்துள்ளது.

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் 86-ஆவது கூட்டம் குழுவின் தலைவர் வினித் குப்தா தலைமையில் காணொலி மூலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் தமிழகத்தின் உறுப்பினரான திருச்சி காவிரி வடிநீர் கோட்ட தலைமைப் பொறியாளர் எம். சுப்பிரமணி, காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலி மூலம் பங்கேற்றனர். கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களின் பிரதிநிதிகளாக தலைமைப் பொறியாளர்களும் காணொலி வழியாக பங்கேற்றனர்.



இந்தக் கூட்டத்தில், தமிழகத்தின் சார்பில் கர்நாடகம் இதுவரை சுமார் 61 டிஎம்சி தண்ணீர் நிலுவை வைத்துள்ளது குறித்து தெரிவிக்கப்பட்டது. மேலும், நாள் ஒன்றுக்கு விநாடிக்கு 15,000 கன அடி தண்ணீர் வீதம் 15 நாள்களுக்கு திறந்துவிட வலியுறுத்தப்பட்டது.

ஆனால், மழைப் பற்றாக்குறையைக் காரணம் கூறி தண்ணீர் தர இயலாது என கர்நாடகம் தெரிவித்தது.

பின்னர், தமிழகம் தரப்பில் மழைப் பற்றாக்குறை காலங்களில் வழங்கப்பட வேண்டிய தண்ணீர் அளவு விவரங்கள் கணக்கிட்டு வழங்கப்பட்டது. இந்தக் கணக்கீடுகளின்படி, நாள் ஒன்றுக்கு காவிரியில் கர்நாடகம் திறந்துவிட வேண்டிய தண்ணீர் விநாடிக்கு 7,000 கன அடிக்கு மேலாக உள்ளது. தமிழகம் சார்பில் 10,000 கன அடி தரவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக, காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுத் தலைவர் வினித் குப்தா, விநாடிக்கு 5,000 கன அடி தண்ணீர் வீதம் அடுத்த 15 நாள்களுக்கு கர்நாடகம் திறந்துவிட பரிந்துரைத்தார். காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு இந்தப் பரிந்துரை அனுப்பப்படும் என ஒழுங்காற்றுக் குழு தரப்பில் கூறப்பட்டது.

தமிழகத்தில் காவிரி டெல்டா படுகையில் குறுவை நெல் சாகுபடிக்கு கடுமையான தண்ணீர் பற்றாக்குறை நிலவிய நிலையில், கடந்த ஆகஸ்ட் 28-ஆம் தேதி 85-ஆவது காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 5,000 கன அடி நீரை 15 நாள்களுக்கு கர்நாடகம் திறந்துவிட ஆகஸ்ட் 29-ஆம் தேதி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 23-ஆவது கூட்டத்தில் உத்தரவிடப்பட்டது.

இதன்படி, காவிரியில் எதிர்பார்க்கப்பட்ட 6.48 டிஎம்சியைவிட கூடுதலாக சுமார் 7 டிஎம்சி (75,000 கன அடி) தண்ணீர் தமிழகத்துக்கு கிடைத்துள்ளதாக தமிழக அரசு வட்டாரங்கள் கூறின.

இந்நிலையில், தற்போது விநாடிக்கு 5,000 கன அடி வீதம் 15 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிட காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்துள்ளது. கர்நாடகம் முறையாகத் தண்ணீரை திறந்துவிட்டால், அடுத்து வரும் நாள்களில் 7 டிஎம்சி தண்ணீரை தமிழகம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் சுமார் 14.5 டிஎம்சி தண்ணீரும், கர்நாடக அணைகளில் சுமார் 55 சதவீதம் அளவுக்கு தண்ணீரும் இருப்பு உள்ளது எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## காவிரி நீரைத் திறக்க இயலாது



**பெங்களூரு, செப். 12:** தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிடும் நிலையில் கர்நாடகம் இல்லை என்று துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

இது குறித்து பெங்களூரில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை அவர் கூறியது: கர்நாடகத்தில் போதுமான மழை பெய்யவில்லை. அதனால், போதுமான தண்ணீர் இல்லை. இந்த உண்மையை காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்திடம் தெரிவிப்போம்.

குடிநீர் வழங்குவதிலும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளோம். குடிநீர்த் தேவைகளுக்கு தண்ணீரை சேமித்துக்கொள்ள எங்களை அனுமதியுங்கள் என்பதே மேலாண்மை ஆணையத்திடம் கர்நாடகத்தின் கோரிக்கையாக உள்ளது.

தற்போது தமிழகத்துக்கு காவிரி நீர் செல்லவில்லை. போதுமான மழை பெய்யவில்லை. காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்யாததால், தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிடும் நிலையில் கர்நாடகம் இல்லை என்றார்.

## தமிழகத்தை வஞ்சிக்கும் செயல்



**சென்னை, செப். 12:** தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுப்பது தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் செயல் என்று கர்நாடகத்துக்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் துரைமுருகன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: விவசாயிகளின் நலன்களைக் கருதாமல் கர்நாடக அணைகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு நீர் தர முடியாது என அந்த மாநிலத்தின் மூத்த அமைச்சரே கூறுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தமிழக விவசாயிகளின் நலன்களைப் பாதிக்கக் கூடிய இத்தகைய செயல்களை தமிழ்நாடு அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. உச்ச நீதிமன்றத்தில் இந்தப் பிரச்னை குறித்து எடுத்துரைத்து, காவிரி நீரைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# விடை சொல்லாத இடைத்தேர்தல்!

தலைநகர் தில்லியில் பிரம்மாண்டமாக நடந்த ஜி20 உச்சி மாநாடு, இந்தியாவின் ஏனைய பிரச்னைகளையும், நிகழ்வுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது. சமீபத்தில் வெவ்வேறு மாநிலங்களில் நடந்த ஏழு சட்டப்பேரவை இடைத்தேர்தல்களும் அதில் அடங்கும். அடுத்த சில மாதங்களில் ஐந்து மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல்களும், அடுத்த ஆண்டு மக்களவைக்கான பொதுத் தேர்தலும் வரவிருக்கும் நிலையில், ஆறு மாநிலங்களில் உள்ள ஏழு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

மும்பையில் காங்கிரஸ் உள்ளிட்ட 28 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து தங்களது கூட்டணிக்கு 'இந்தியா' என்று பெயர் சூட்டியதைத் தொடர்ந்து நடைபெற்ற இடைத்தேர்தல்கள் இவை. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஆட்சியில் இருந்து அகற்றும் எதிர்க்கட்சிகளின் முனைப்புக்கு முதல் கட்ட சோதனை முயற்சியாக நடந்து முடிந்த இடைத்தேர்தல் முடிவுகளைக் கருத முடியாது. ஏனென்றால், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில், மும்பையில் வெளிப்படுத்திய ஒற்றுமையை இந்தியா கூட்டணியால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆனாலும்கூட, திரிபுராவிலும், உத்தர பிரதேசத்திலும் அந்த ஒற்றுமை களம் கண்டது.

ஆறு மாநிலங்களில் ஏழு சட்டப்பேரவைகளுக்கான இடைத்தேர்தலில் மூன்றை பாஜகவும், நான்கை இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் வென்றிருக்கின்றன. இடைத்தேர்தல் முடிவுகளிலிருந்து எந்தவொரு தெளிவான அரசியல் அறிகுறியையும் காண முடியவில்லை என்றாலும், எதிர்க்கட்சி ஒற்றுமை சாத்தியமானால் மட்டுமே பாஜகவை தேசிய அளவில் எதிர்கொள்ள முடியும் என்பதற்கான சமிக்ஞை தெரிகிறது.

மாநிலத்துக்கு மாநிலம் எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி பாஜகவை எதிர்கொள்ள வெவ்வேறு உத்திகளைக் கையாள வேண்டும் என்பதை முடிவுகள் தெரிவிக்கின்றன. ஏழில் நான்கு தொகுதிகளில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வெற்றியடைந்தன என்றாலும், அவற்றில் இரண்டு தொகுதிகளில் தங்களது கூட்டணியில் இடம் பெறும் கட்சியையே தோற்கடித்திருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

நடந்து முடிந்த இடைத்தேர்தல்களில் முக்கியமானதும், குறிப்பிடத்தக்கதும் உத்தர பிரதேச மாநிலத்தின் கோசி தொகுதிக்கான இடைத்தேர்தல். பாஜகவின் தாராசிங் செளஹான், சமாஜவாதி கட்சி வேட்பாளர் சுதாகர் சிங்கிடம் தோல்வியைத் தழுவியது எதிர்பாராத திருப்பம். அடிக்கடி கட்சி மாறும் தாராசிங் செளஹானுக்கு மக்கள் வழங்கியிருக்கும் தண்டனை என்றுகூட தேர்தல் முடிவைக் குறிப்பிடலாம். பகுஜன் சமாஜ் கட்சியிலிருந்து பாஜகவுக்கும், பாஜகவிலிருந்து சமாஜவாதி கட்சிக்கும், அதிலிருந்து மீண்டும் பாஜகவுக்கும் தொடர்ந்து கட்சி மாறிக்கொண்டிருந்தவர் செளஹான்.

சமாஜவாதி கட்சி சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த தாரா சிங் செளஹான், பாஜகவில் மீண்டும் இணைந்ததைத் தொடர்ந்து, தனது எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்து இடைத்தேர்தலுக்கு வழிகோலினார். 2022 சட்டப்பேரவைத் தேர்தலில் சமாஜவாதி கட்சி வேட்பாளராக 1,08,430 வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற தாராசிங் செளஹான், இடைத்தேர்தலில் பாஜக வேட்பாளராக 81,686 வாக்குகள்தான் பெற முடிந்திருக்கிறது. கடந்த ஆண்டு 22,216 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர், இப்போது 42,759 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியிருக்கிறார்.

ஆறு சட்டப்பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கிய கோசி மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சிபிஐ (எம்.எல்.), பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவை கணிசமான செல்வாக்குப் பெற்றவை. கடந்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் வாசிம் இக்பால், 53,953 வாக்குகள் பெற்றிருந்தார். இந்த முறை காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவை வேட்பாளர்களை நிறுத்தாமல், சமாஜவாதி கட்சிக்கும், பாஜகவுக்குமான நேரடிப் போட்டியாக கோசி இடைத்தேர்தலை மாற்றின. அதன் விளைவு, சமாஜவாதி கட்சியால் பாஜகவை வீழ்த்த முடிந்திருக்கிறது.

உத்தரகண்ட் மாநிலம் பாகேஷ்வர், திரிபுராவில் உள்ள போக்ஸா நகர், தன்பூர் தொகுதிகளில் ஆளுங்கட்சியாக இருக்கும் பாஜக வெற்றி பெற்றிருக்கிறது. ஜார்க்கண்ட் மாநிலம் தும்ரி தொகுதியிலும் ஆளும் ஜேஎம்எம் வெற்றி பெற்றிருக்கிறது. மேற்கு வங்கத்தின் துப்குரி தொகுதியில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் எதிர்க்கட்சியான பாஜகவை மட்டுமல்லாமல், காங்கிரஸ் - இடதுசாரி கூட்டணி வேட்பாளரையும் தோற்கடித்திருக்கிறது.

கேரள மாநிலம் புதுப்பள்ளி தொகுதி இடைத்தேர்தலில் எதிர்பார்த்தது போலவே காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரும், மறைந்த முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டியின் மகனுமான சாண்டி உம்மன் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்துடன் வெற்றி பெற்றிருக்கிறார். 53 ஆண்டுகளாக உம்மன் சாண்டியைத் தேர்ந்தெடுத்த தொகுதியில், அவரது மகன் வெற்றி பெற்றிருப்பது அனுதாப அலையினால் மட்டுமே அல்ல. முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான இடது முன்னணி ஆட்சியின் மீதான அதிருப்தியும் சேர்ந்து கொண்டதால், உம்மன் சாண்டி பெற்றதைவிட அதிக வாக்குகள் பெற்று அவரது மகனால் தொகுதியை தக்க வைத்துக்கொள்ள முடிந்திருக்கிறது.

எதிர்க்கட்சிகள் தங்களது 'இந்தியா' கூட்டணியில் எப்படி முழுமையான ஒற்றுமையை ஏற்படுத்தப் போகின்றன என்பதைப் பொறுத்து, 2024 மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பாஜகவுக்கு வலுவான போட்டியை ஏற்படுத்த முடியும் என்பதைத்தான் இடைத்தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழகத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

## தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா

**சென்னை, செப். 12:** தமிழ்நாடு முழுவதும் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார். டெங்கு மற்றும் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதால் தொற்று நோய்கள் பரவலைத் தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அரசுத் துறைச் செயலர்கள், அலுவலர்கள் தரப்பில் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. தமிழகத்தில் மொத்தமுள்ள 2 ஆயிரத்து 972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் தினமும் பெறப்பட்டு வருகின்றன.



டெங்கு, தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்களுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம்.

டெங்கு காய்ச்சலைத் தடுக்க உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 21 ஆயிரத்து 307 தற்காலிக பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு கொசுப்புழு தடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவையான உயிர் காக்கும் மருந்துகள், ரத்த அணுக்கள், பரிசோதனைக் கருவிகள் ஆகியன போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் ஏற்பட்டவுடன் பொது மக்கள் மருத்துவமனையை அணுகுமாறும் தாங்களாகவே எந்த மருந்தும் உட்கொள்ளக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

கொசு உற்பத்தியைத் தடுக்க 16 ஆயிரத்து 5 எண்ணிக்கையில் புகை அடிக்கும் இயந்திரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் கையிருப்பில் உள்ளதாக கூட்டத்தில் கூறப்பட்டது.

டெங்கு காய்ச்சலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும், பொது மக்களும் தங்களது வீடுகளைச் சுற்றி கொசுக்கள் தேங்காதவகையிலும் குடிநீர் மாசுபடாமல் இருக்கவும் போதிய ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும் என்று சிவ்தாஸ் மீனா கேட்டுக் கொண்டார்.

# 90 எல்லை உள்கட்டமைப்புத் திட்டங்கள்: நாட்டுக்கு அர்ப்பணித்தார் ராஜ்நாத் சிங்

**சம்பா/ஜம்மு, செப். 12:** ரூ.2,941 கோடி செலவில் எல்லை சாலைகள் அமைப்பால் (பிஆர்ஓ) மேற்கொள்ளப்பட்ட 90 உள்கட்டமைப்புத் திட்டங்களை, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்செவ்வாய்க்கிழமைநாட்டுக்கு அர்ப்பணித்தார்.

வியூக ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டங்கள், அருணாசல பிரதேசம் உள்பட வடக்கு-வடகிழக்கில் உள்ள 10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதையொட்டி, ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் எல்லை சாலை அமைப்பு சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார். சம்பா மாவட்டத்தில் பிஷ்ணா-கௌல்பூர்-புல்பூர் சாலையில் 422.9 மீட்டர் தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ள தேவக் பாலத்தை திறந்து வைத்த அவர், இதர 89 உள்கட்டமைப்புத் திட்டங்களையும் காணொலி முறையில் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

22 சாலைகள், 63 பாலங்கள், ஒரு சுரங்கப் பாதை, 2 விமான தளங்கள், 2 ஹெலிகாப்டர் தளங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

அருணாசலபிரதேசத்தில் 36, லடாக்கில் 25, ஜம்மு-காஷ்மீரில் 11, மிஸோரமில் 5, ஹிமாசல பிரதேசத்தில் 3, சிக்கிம், உத்தரகண்ட், மேற்கு வங்கத்தில் தலா 2, நாகாலாந்து, ராஜஸ்தான், அந்தமான்-நிகோபார் தீவுகளில் தலா ஒரு திட்டங்கள் இதில் அடங்கும்.

வியூக ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த உள்கட்டமைப்புத்



ஜம்முவில் அமைக்கப்பட்டுள்ள பாலம் திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

திட்டங்கள் அனைத்தும் அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, குறுகிய காலகட்டத்துக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

**'குடிமக்களுக்கும் பொறுப்பு':** நிகழ்ச்சியில் பேசிய ராஜ்நாத் சிங், 'நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு ராணுவத்தினருக்கு மட்டுமல்ல; குடிமக்களுக்கும் உள்ளது' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: ராணுவம்-குடிமக்கள் இணைப்பு என்பது காலத்தின் தேவையாகும். இந்த இணைப்புக்கு எல்லை சாலைகள் அமைப்பு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கடந்த சில ஆண்டுகளில், எல்லை உள்கட்டமைப்பில் இந்த அமைப்பு ஆற்றியுள்ள பங்களிப்பு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும்.

**பல்வேறு கட்சிகள் ஆதரவு:** தற்போதைய 90 திட்டங்களும் பல்வேறு கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு அனைத்து தரப்பினரிடம் இருந்தும் முழு ஆதரவு கிடைக்கப் பெற்றது.

நாட்டின் பாதுகாப்புக்கு அல்லது 'பாரத மாதா'வுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் எழுந்தால், சித்தாந்த வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, அனைத்து கட்சிகளும் ஒன்றுபடுவது இந்தியாவின் பலமாகும்.

**3 ஆண்டுகளில் 295 திட்டங்கள்:** கடந்த 3 ஆண்டுகளில் 295 உள்கட்டமைப்புத் திட்டங்களை எல்லை சாலைகள் அமைப்பு நிறைவேற்றியுள்ளது. கடந்த 2022-இல் ரூ.2,900 கோடி மதிப்பில் 103 திட்டங்களும், 2021-இல் ரூ.2,200 கோடி மதிப்பில் 102 திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன, இது, எல்லைச் சாலைகள் அமைப்பின் கடின உழைப்பையும், பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உள்கட்டமைப்புத் திட்டங்கள், எல்லைகளை பாதுகாக்க உதவுவதோடு, அப்பகுதிகளின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திலும் அண்டை நாடுகளுடனான போக்குவரத்திலும் முக்கிய பங்காற்றுகிறது.

**விரைவில் புதிய சாதனை:** ஹிமாசலப் பிரதேசம் மற்றும் லடாக் பகுதிகளை இணைக்கும் ஷின்குன் லா சுரங்கப் பாதை விரைவில் திறக்கப்படும்போது, உலகிலேயே மிக உயரத்தில் (15,855 அடி) சுரங்கப் பாதையை நிர்மாணித்த சாதனை எல்லை சாலைகள் அமைப்புக்கு சொந்தமாகும் என்றார் ராஜ்நாத் சிங்.

கிழக்கு லடாக்கில் ரூ.200 கோடியில் அமைக்கப்படவிருக்கும் விமான தளத்துக்கு ராஜ்நாத் சிங் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.

இந்த விமான தளம், ஆயுதப் படைகளின் செயல்பாட்டுக்கு திருப்புமுனையாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

## 5,700 அடி உயரத்தில் சுரங்கப் பாதை

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்த 90 எல்லைப் பகுதி உள்கட்டமைப்புத் திட்டங்களில், அருணாசல பிரதேசத்தின் மேற்கு கமேங் மாவட்டத்தில் 5,700 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட சுரங்கப் பாதையும் ஒன்றாகும்.

பாலிபரா-சார்துவார்-தவாங் சாலையில் 500 மீட்டர் தொலைவு கொண்ட இந்த சுரங்கப் பாதை, வியூக முக்கியத்துவம் வாய்ந்த தவாங் பகுதிக்கு அனைத்து வானிலைகளிலும் போக்குவரத்தை உறுதி செய்யும். ஆயுதப் படைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு இது பயனளிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாரத் மண்டபத்தில் கண்கவர்ந்த உலக தேசங்களின் கலாசார கலைப்பொருள்கள்!

தில்லியில், அண்மையில் நடைபெற்ற பாரதத்தின் தலைமையிலான ஜி 20 நாடுகளின் மாநாட்டில், இந்தியாவின் கலாசார சிறப்புகளை பல்வேறு வெளிநாட்டுத் தலைவர்களும், பிரதிநிதிகளும் தெரிந்துகொள்ளும் வகையில் பாரத் மண்டபத்தில் பிரம்மாண்ட நடராஜர் சிலை, நாளந்தா பல்கலைக்கழக பின்னணி, கோனார்க் சூரியன் கோயில் தேர் சக்கர மாதிரி உள்ளிட்ட பல்வேறு படைப்புகள் அமைக்கப்பட்டிருந்தன.

'வசுதைவ குடும்பகம்' என்னும் பாரதத்தின் உலகளாவிய பரந்துபட்ட பார்வையான 'உலகம் ஒரு குடும்பம்' என்ற கருப்பொருளில் இந்தியா இந்த மாநாட்டை நடத்திய நிலையில், பிற நாடுகளின் செறிந்த கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் அறிந்துகொள்ளும் வகையில் இதே மண்டபத்தில் கலைப்பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. 'கலாசார வளாகம், டிஜிட்டல் அருங்காட்சியகம்' என இது அமைக்கப்பட்டிருந்தது.

பாரத் மண்டப கலாசார வளாகத்தில் ஜி 20 நாடுகள் மற்றும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட ஒன்பது நாடுகளின் பாரம்பரிய கருத்துகள் மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அந்த நாடுகளில் இருந்து பெறப்பட்ட புராதன பொருள்கள் கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டு, அதன் விவரங்களை டிஜிட்டல் மூலம் பார்வையாளர்கள் பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியா, இந்தோனேசியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆர்ஜென்டினா, பிரேஸில், சீனா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான், ரஷியா, தென்ஆப்பிரிக்கா, துருக்கி, தென் கொரியா, இத்தாலி, மெக்சிகோ, சவூதி அரேபியா, பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஸ்பெயின், நைஜீரியா, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளின் சிறப்புக்குரிய பாரம்பரிய, கலாசார அம்சங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 29 நாடுகளின் மகத்துவமிக்க விஷயங்களை வெளிப்படுத்தும் வகையில், டிஜிட்டல் வடிவிலான பிரம்மாண்ட திரைகளில் விடியோ படங்களும் கலாசார வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக, தில்லியில் உள்ள ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி தேசிய சம்ஸ்கிருத பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட பாணினியின் 'அஷ்டாத்யாயி' இலக்கண நூலின் பிரதி இந்தியா சார்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.






1. ரஷியாவின் பண்டைய ககாஸ் பகுதியின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் போகோ மணிகள், பொத்தான்கள், முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட பெண்கள் அணியும் உடை. 2. புதுமையான வடிவங்கள் மற்றும் அமைப்புகளுடன் கூடிய ஸ்பானிஷ் நாட்டின் பல்வேறு பாரம்பரிய விசிறிகள். 3. பிரேஸில் தேசிய நாடாளுமன்ற அரண்மனையின் மாதிரி. 4. பாணினியின் 'அஷ்டாத்யாயி' இலக்கண நூலின் பிரதி.

பாரீஸில் உள்ள லூவர் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 16- ஆம் நூற்றாண்டின் லியோனார்டோ டா வின்சியின் தலைசிறந்த மோனாலிசாவின் அனமார்பிக் டிஜிட்டல் புகைப்படமும் இந்த அருங்காட்சியத்தில் இடம்பெற்றுள்ளது. அமெரிக்க அரசால் சான்றளிக்கப்பட்ட 'சுதந்திர சாசனத்தின் பிரதி'யும் பாரத் மண்டப வளாகத்தில் இடம் பெற்றிருந்தது.



லிலி பான்டேயா

பிரிட்டனின் மாக்னா கார்ட்டாவின் அரிதான நகல் வடிவம், சீனாவின் ஃபஹுவா-லிட்-ஜார் எனும் பெரிய நீலநிற ஜாடி என பல்வேறு நாடுகளின் பிரத்யேக கலைப்பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 'ஃபைஜிட்டல்' வடிவத்தில் அதாவது, இயற்பியல் மற்றும் டிஜிட்டல் கூறுகளைக் கொண்டதாக இந்த டிஜிட்டல் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. ஜி 20 நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் இந்தக் கலாசார வளாகம் வழியாக நடந்து சென்றனர்.

'மத்திய கலாசார அமைச்சகத்தின் கற்பனையில் உருவான 'கலாசார வளாகம்' இது. உச்சி மாநாட்டைக் குறிக்கும் வகையில் 'ஜனநாயகத்தின் தாய்' என்ற கருப்பொருளில் ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. இந்தக் கலாசார வளாகத்தை உருவாக்குவதற்கும், இதற்கான கண்காட்சியில் ஜி20 மற்றும் அழைப்புநாடுகளில் இருந்து பழங்கால கலைப் பொருள்களை கொண்டுவருவதற்குமான முயற்சிகளிலும், பணிகளிலும் கடந்த சில மாதங்களாகவே அமைச்சக ஊழியர்கள் தொடர்ந்து ஈடுபட்டனர்.

இக்கண்காட்சி இந்தியா உள்ளிட்ட ஜி 20 நாடுகளில் செறிந்த கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. இந்த கலாசார அருங்காட்சியகத்தின் விஷயங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும் அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதை பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிடுவது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று மத்திய கலாசார அமைச்சகத்தின் இணைச் செயலர் லிலி பான்டேயா தெரிவித்தார்.

மத்திய கலாசார அமைச்சகத்தின் அருங்காட்சியக பிரிவு இயக்குநர் விவேக் குப்தா கூறுகையில், 'இங்குள்ள ஒவ்வொரு காட்சியும் தனித்துவமிக்கவை. அந்தந்த நாட்டின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும். கலாசார அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள கலைப் பொருள்கள் ஜி 20 நாடுகள் மற்றும் அழைப்பு நாடுகளில் இருந்து 3 மாதங்களுக்கு மட்டும் பெறப்பட்டுள்ளன. அதன் பிறகு அவை அந்தந்த நாட்டு அருங்காட்சியகங்களுக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளன' என்றார்.

# எழுத்தாளர் யுவன் சந்திரசேகருக்கு விஷ்ணுபுரம் இலக்கிய விருது

**கோவை, செப்.12:** கோவை விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் சார்பில், எழுத்தாளர் யுவன் சந்திரசேகருக்கு 'விஷ்ணுபுரம் இலக்கிய விருது' வழங்கப்பட உள்ளது.



யுவன் சந்திரசேகர்

கோவை விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் அமைப்பு சார்பில், கடந்த 2010-ஆம் ஆண்டு முதல் இலக்கியவாதிகளைக் கௌரவிக்கும் விதமாக 'விஷ்ணுபுரம் இலக்கிய விருது' வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டு எழுத்தாளர் யுவன் சந்திரசேகருக்கு விஷ்ணுபுரம் இலக்கிய விருது வழங்கப்பட உள்ளது. இவருக்கு ரூ.5 லட்சம் ரொக்கம் மற்றும் கேடயம் வழங்கப்பட உள்ளது.

மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகே உள்ள கரட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த யுவன் சந்திரசேகர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்.

பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். ஏராளமான சிறுகதைகள், கவிதைகள், நாவல்களை எழுதியுள்ள இவருக்கு கோவையில் வரும் டிசம்பர் 16, 17-ஆம் தேதிகளில் நடைபெற உள்ள விழாவில் இந்த விருது வழங்கப்பட உள்ளது. விழா நடைபெறும் இடம் உள்ளிட்ட விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.